**மாகாண வீதிகள் அபிவிருத்திச் செயற்திட்டம் (மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள்) - 2013**

---

மாகாண வீதிகள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள்) 2013 திசெம்பர் 31 இல் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (ஜேஐசீஏ) இடையில் கைசாத்திடப்பட்ட 2010 மார்ச் 26 ஆம் திகதிய எஸ்எல்-பீ 96 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

மாகாண வீதிகள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்கள்) கடன் உடன்படிக்கையின்படி, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணசபைகள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளதுடன் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. மாகாண விதிகளை புனரமைத்தல் மற்றும் தரமுயர்த்தல் மூலம் விசேடமாக கிராமப் பகுதிகளிலுள்ள மக்களிற்காக வீதி வலையமைப்பின் ஒருங்கிணைப்பு மற்றும் நம்பகத்தன்மையை உயர்த்துதல் மூலமும் அத்துடன் வீதி முகவர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களின் நிறுவனரீதியான இயலளவை வலுப்படுத்தல் மூலமும் உள்ளூர் பொருளாதாரத்தின் அபிவிருத்தி மற்றும் பிராந்திய வறுமையை குறைத்தல் என்பவற்றிற்கு பங்களிப்புச் செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின்படி செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பிட்ட கிரயம் ஜப்பான் யென் 11,171 மில்லியனானதுடன் அவற்றில் ஜப்பான்யென் 9,156 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பிற்கான முகவராண்மையினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. ஜப்பான் யென் 2,015 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 செப்டெம்பர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 சனவரி அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது. பின்னர் செயற்திட்டக் காலம் 2015 மார்ச் 25 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிசார் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின்படி இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். இந்த பொறுப்பு நிதிக்கூற்றுக்கள் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளின் திட்டமிடல், அமுல்படுத்தல் செயற்படுத்துதல் மற்றும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பிரயோகித்தலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தலும் இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்தின் அடிப்படையும்**

---

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான

செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடன்களின் கீழ் செய்யப்பட்ட பற்றுதல்கள் குறித்துரைக்கப்பட்ட கடன் உடன்படிக்கையின் அளவீடுகளுக்கு இணங்கியிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்ட நோக்கங்களுக்காவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டதா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) விசேட (யென்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள், அதற்கான மீளளிப்புக்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும்

வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமாக இருந்தனவா என்பதும்,

(ஐ) எனது கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) கடன் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட நிதியளிப்பு கட்டுப்பாடுகளுக்கு இணங்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

--------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணியுள்ளதெனவும் நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தினை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் விளக்குகின்றன என்பதும்

(ஆ) எதன் பொருட்டு நிதி வழங்கப்பட்டதோ அதன் பொருட்டே அது பயன்படுத்தப்பட்டது என்பதும்

(இ) 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விசேட (யென்) கணக்கிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீளளிப்புக்கள் என்பன செயற்திட்டம் பேணியுள்ள ஏடுகளிலும் பதிவேடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிக்கொணரப்பட்டுள்ளன என்பதும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்தினத்தில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாகக் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டுள்ளன என்பதும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்தஞ் செய்வதற்கு முகாமைத்துவத்தால் திருப்பதிகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் விதித்துரைக்கப்பட்ட நிதியளிப்புக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியுள்ளன என்பதும்

எனது அபிப்பிராயமாகும்.

## 4. நிதிக்கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா. 3,932,882,960 ஆகவும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 6,702,236,433 ஆகவும் காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் (நடைபெறும் வேலை) | 3,397,652,023 | 1,868,542,841 | 5,735,928,233 |
| பொறியும் இயந்திரமும் | 100,686,719 | 6,173,000 | 106,859,718 |
| தளபாடமும் அலுவலக உபகரணங்களும் | 324,035 | 205,791 | 775,745 |
| ஆலோசனைக் கட்டணங்கள் | 247,198,043 | 163,994,441 | 515,863,800 |
| கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் கடன் வட்டி | 52,642,795 | 42,477,891 | 115,430,405 |
| நிர்வாகக் கிரயம் | 134,379,345 | 44,521,528 | 227,378,532 |
| | 3,932,882,960 | 2,125,915,492 | 6,702,236,433 |

### 4.2 விசேட (யென்) கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விசேட (யென்) கணக்கிற்கான செயற்பாடுகள் மற்றும் அத்திகதியில் உள்ளவாறான அவற்றின் மீதி என்னபவற்றின் பொழிப்பு கீழே தரப்படுகின்றன.

| | ஜப்பான் யென் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 682,620,358 | 1,010,209,868 |
| கூட்டு: மீள் நிரப்பல்கள் | 1,918,770,255 | 2,555,071,382 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம்/(நட்டம்) | - | (167,579,308) |

| | | |
|---|---|---|
| | 2,601,390,613 | 3,397,701,942 |
| கழி: பற்றுதல்கள் | 1,934,229,960 | 2,566,486,484 |
| | --------------------- | -------------------- |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 667,160,653 | 831,215,458 |
| | ======== | ======== |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

39 வீதிப் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவு வழங்கும்போது கழிக்கப்பட்ட ரூபா 330,321,579 தொகையான பிடிகாசு செயற்திட்டத்தின் பொறுப்பாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. எனவே 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பிடிகாசு மற்றும் சிவில் நடைபெறும் வேலைகளின் பெறுமதி என்பன அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

## 6. நிதி மற்றும் செற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்குரிய நிதிகளின் நிதியீட்டம், பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான நிதிகளின் பயன்பாடு என்பவற்றிற்குரிய முக்கியமான புள்ளிவிபரங்களில் சில கீழே காண்பிக்கப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் படி நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஒதுக்கீடு | 2013 ஆம் ஆண்டின் போதான நிதிகளின் பயன்பாடு | | 2013 திசெம்பர் 31 வரை திரண்ட நிதிகளின் பயன்பாடு | | மொத்த நிதியேற்பாட்டின் சதவீதமாக 2013 திசெம்பர் 31 வரை பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ஜப்பான் யென். மில். | ரூபா. மில். | ரூபா. மில். | ஜப்பான் யென். மில். | ரூபா. மில். | ஜப்பான் யென். மில். | ரூபா. மில். | |
| ஜேஐசீஏ | 9,156 | 11,628 | 3,004 | 2,216.38 | 2,938.26 | 3,805.82 | 5,296.78 | 46 |
| ஜீஓஎஸ்எல் | 2,015 | 2,559 | 478 | 233.79 | 309.93 | 443.42 | 616.36 | 24 |
| | 11,171 | 14,187 | 3,482 | 2,450.17 | 3,248.19 | 4,249.24 | 5,913.14 | 42 |

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செயற்திட்டக் காலத்தில் 75 சதவீதம் கடந்த பின்னரும் ஒதுக்கப்பட்ட மொத்த நிதியில் 42 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் மத்திய மாகாணத்தில் 75.40 கிலோமீற்றர் நீளமான 08 வீதிகளும் சப்ரகமுவ மாகாணத்தில் 75 கிலோமீற்றர் நீளமான 06 வீதிகளும் செயற்திட்டத்தின் 1 ஆம் கட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் அந்த வேலைகள் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு வேண்டப்பட்டிருந்தது. எனினும், அத் திகதியில் உள்ளவாறு இந்த வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் பௌதீக செயல்முன்னேற்றம் 56 சதவீதம் தொடக்கம் 96 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. இதில் மத்திய மாகாணத்தின் போகஹவத்த - மல்தெனிய - ஹந்துனாவ வீதியின் (சீபீ1என்ஈ1) புனரமைப்பு வேலைகள் மற்றும் சப்ரகமுவ மாகாணத்தின் உத்துவன்கந்த – உஸ்ஸபிட்டிய வீதி (எஸ்ஜீ1கேஜீ3) புனரமைப்பு வேலைகள் முறையே 56 சதவீதம் மற்றும் 58 சதவீதமான மந்தகதியான செயல்முன்னேற்றத்தைக் காண்பித்தது.

(ஆ) மேலும் செயற்திட்டத்தின் 02 ஆம் கட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தில் புனரமைப்புச் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 77.6 கிலோ மீற்றர் நீளமான 07 வீதிகள் மற்றும் சப்ரகமுவ மாகாணத்தில் 91.8 கிலோ மீற்றர் நீளமான 13 வீதிகள் என்பவற்றின் புனரமைப்பு வேலைகள் 2014 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்ய வேண்டுமென கோரப்பட்டிருந்தது. எனினும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உளள்வாறு இந்த வீதிகளின் புனரமைப்பு வேலைகளின் பௌதீக செயல்முன்னேற்றம் 21 சதவீதம் தொடக்கம் 82 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. மத்திய மாகாணத்தின் அங்கெலிபிட்டிய – உடவெல – அம்பிட்டிய வீதியினதும் (சீபீ2கேடீ7/8/9), தெல்தொட்ட – போப்பிட்டிய வீதியினதும் (சீபீ2கேடீ103) புனரமைப்பு வேலைகளின் பௌதீக் செயல்முன்னேற்றம் 30 சதவீத்திற்கும் குறைந்த அளவைக் காண்பித்திருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் சப்ரகமுவ மாகாணத்தில் முவகம – நிராகம – அழுபொத்த – யக்தெஹிவத்த வீதியினதும் (எஸ்ஜீ2ஆர்பீ2-ஏ) கொட்டமுல்ல – கரன்கொட - திமிடியாவ வீதியினதும் (எஸ்ஜீ2ஆர்பீ3பீ) புனரமைத்தல் வேலைகள் முறையே 24 சதவீதம் மற்றும் 21 சதவீதம் என்ற மெதுவான செயல்முன்னேற்றத்தை காட்டியமையால் இந்த புனரமைப்பு வேலைகள் பட்டியலிடப்பட்ட திகதிகளில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையைக் காண்பித்தது.

(இ) செயற்திட்டத்தின் மூலம் 17 தொகுதிகளின் கீழ் சப்ரகமுவ மாகாணத்தில் 146.8 கிலோமீற்றர் நீளமான 19 வீதிகளின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2014 ஆகஸ்ட் மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) கொட்டமுல்ல – திமிடியாவ வீதியின் (எஸ்ஜீ2ஆர்பீ3-பீ) 2+325 கிலோமீற்றர் எல்லையில் உள்ள பாலத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ஒபப்ந்தக்காரர்களின் குறைபாடுகளினால் 2014 யூலை மாதம் தொடக்கம்

கைவிடப்பட்டிருந்தது. இருபக்கமும் கழுவிச் செல்லப்பட்டமையினால் இந்த பாலத்தின் மூலம் வாகனங்கள் போக்குவரத்துச் செய்வது பாதுகாப்பற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) அரனாயக்க – அம்பலகந்த வீதியின் புனரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்ற ஒப்பந்தக்காரரால் நிர்மாணத்தளங்களில் முறையான சுற்றாடல் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதனால் அங்கு அகழப்படுகின்ற மண், பெருமளவான கற்கள், உடைந்த வீதியின் இருபக்கமும் குவிக்கப்பட்ட கழிவுகள் தொடர்பாகவும் வீதி நிர்மாண நடவடிக்கைகளின் போது வளி மாசடைதல் தொடர்பாகவும் பிரதேசவாசிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

(iii) கெட்டஹெத்த – கரன்கொட வீதியில் (எஸ்ஜீ2ஆர்பீ4) 12+064 கிலோமீற்றர் எல்லைக்கு அருகில் அமைந்துள்ள பாலம் மீளமைக்கப்பட்டிருந்ததுடன் மழை காலங்களின் போது வெள்ள ஆபத்து ஏற்பட்டமையினால் திருத்த நடவடிக்கைகளின் போது அகற்றப்பட்ட கனமான கொங்கிரீட் குற்றிகள் அருகிலுள்ள அருவிக்குள் அடித்துச் செல்லப்பட்டமையினால் அருவி தடைப்பட்டிருந்தது.

(ஈ) செயற்திட்டத்தின் 22 தொகுதிகளின் கீழ் மத்திய மாகாணத்தில் 163.5 கிலோமீற்றர் நீளமான 24 வீதிகளின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2014 யூலை மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(i) தென்ன – ஒவிட்டிகங்க – டொடன்தெனிய வீதி (சீபீ1எம்ரீ1) மற்றும் கடுவெல – வெஹிகல – லெலியம்பே வீதி (சீபீ1எம்ரீ2) என்பவற்றின் புனரமைப்பு நடவடிக்கைகள் 2013 திசெம்பர் 08 ஆந் திகதி வரையில் கணிசமான அளவில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. இருந்த போதிலும் உரிய வீதியின் வசதி மற்றும் பாதுகாப்பான போக்குவரத்திற்குத் தேவையான வீதி சமிக்ஞைகள் பொருத்தப்படாதிருந்தமை மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் வீதியின் வடிவமைப்பு மற்றும் நலிவான தார் இடுதல் காரணமாக வீதியின் வளைவுகளில் மேற்பகுதி உடைந்திருந்தமையினால் தென்ன – ஒவிட்டிகங்க – டொடன்தெனிய வீதியின் முதலாவது ஐந்து கிலோமீற்றர் பகுதியில் போக்குவரத்துச் செய்வது போதிய பாதுகாப்பற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) புற்கள் பதித்தல் மற்றும் அருவி தடைப்பட்டமை போன்றவற்றின் காரணமாக அம்பிட்டிய – உடுவெல வீதியில் (சீபீ2கேடீ7) முதலாவது 200 மீற்றருக்கு புற்பதித்தல் வேலைகள் என்பன திருப்திகாரமான நிலையில் காணப்படவில்லை.